# கம்பம் நகராட்சி

**2020–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (30.09.2020) ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

<table>
<tr><td>1.</td><td>நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் 09/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>2.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட உத்தமபுரம் பிள்ளையார் கோவில் தெருவில் சாக்கடை கால்வாய் சேதம் அடைந்து பள்ளமாக இருப்பதால் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கி காயம் அடைகின்றனர் எனவும் சாக்கடை கால்வாயை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் நாளிதழ் செய்தி வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட இடத்தில் கால்வாய் சேதமடைந்து கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளதால் அவ்விடத்தில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கப்படவேண்டியுள்ளது. மேற்காணும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 4,00,000/–(ரூபாய் நான்கு இலட்சம் மட்டும் ) –ல் பணிகள் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கான செலவினத்தை பொதுநிதி 2020–2021–ல் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>3.</td><td>இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2079, நாள். 31.08.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி, கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 29.09.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்.</th><th>கூடுதல் %</th><th>குறைவு %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2"><u>பொதுநிதி 2020–2021</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால்சாமி நகர் நுண்உர செயலாக்க மையத்தின் (MCC) உட்பகுதியில் வளமீட்டு மையம் (Resource Recovery Centre) மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல்</td><td rowspan="2">9,50,000/–</td><td>வி. கிருஷ்ணன்</td><td>–</td><td>0.57</td></tr>
<tr><td>எல். ராஜேந்திரன்</td><td>1.07</td><td>–</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. வி. கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.57 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>4.</td><td>இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2077, நாள். 31.08.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் பணி மேற்கொள்ள 30.09.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.</td></tr>
</table>

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி 2020–2021</u>**<br>**31** எண்ணம் பேட்டரியால் இயங்கும் வாகனத்தினை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 6,40,000/– | Jayam Equipment and Engineering. Dharapuram | மதிப்பீட்டு தொகைக்கு சமமாக | |
| | | | Una E Rickshaw, Karaikudi | 20.00 | – |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Jayam Equipment and Engineering, Thiruppur நிறுவனம் மதிப்பீட்டு தொகைக்கு சமமாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** இந்நகர்மன்ற தீர்மான எண். **2074**, நாள்.**31.08.2020** – இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக காணொலி காட்சியரங்கத்திற்கு தேவையான **2.50** KVA திறனுடைய தடையில்லா மின்வழங்கி மற்றும் பொருத்தமான திறன்உள்ள இரண்டு மின்கலன்கள் விநியோகம் செய்து பொருத்திடும் பணிகள் மேற்கொள்ள **18.09.2020** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | சன் பவர் சிஸ்டம்ஸ் & சர்வீசஸ், 6/21எ, வெங்கட்ராமன் தெரு, சின்னச்சொக்கிக் குளம், மதுரை–2 | ரூ. 54,200/– |
| 2. | ஸ்ரீ பாலமீனாட்சி எலக்ட்ரிகல் சென்டர், 2/299-D, குபேரன் தெரு, விஸ்வநாததாஸ் நகர், மதுரை–14 | ரூ. 56,200/– |
| 3. | அல்ட்ரா பவர் சொலுசன்ஸ், 8/33, லூர்து நகர், 7–வது மெயின்ரோடு, கே.புதூர், மதுரை–7 | ரூ. 49,500/– |

**அலுவலகக் குறிப்பு:–**

1) மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய மதுரை, அல்ட்ராபவர் சொலுசன்ஸ், நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆணையாளர்(பொ) மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**6.** இந்நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலைக்கு பாத்தியப்பட்ட எல்.எப். ரோட்டில் கம்பம் நகராட்சி மூலம் கழிவுநீர் வடிகால் அமைக்க உதவிக்கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலை துறை, உத்தமபாளையம் மூலம் அனுமதிக்கப்பட்டதன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடத்தில் வடிகால் அமைக்கப்படுவதை ஆட்சேபித்து திரு. செ. கணேசன், செக்கடி தெரு, கம்பம் என்பவரால் மாவட்ட நீதிமன்றம், உத்தமபாளையத்தில் வழக்கு ஓ.எஸ். எண். **66/2020** மற்றும் இடைநிலை மனு I.A.No. **292/2020**–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகியும், தொடர்ந்து வழக்கினை நடத்திடவும் திரு. இரா. காந்தன், பி.எஸ்.சி., பி.எல்., நகராட்சி வழக்கறிஞர், கம்பம் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 5,000/– அய் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **7.** | இந்நகராட்சிக்கு சொந்தமான காளவாசல் II திருவள்ளுவர் காலனி அங்கன்வாடி மைய கட்டிடம் மற்றும் தாத்தப்பன்குளம் கோவில் அங்கன்வாடி மைய கட்டிடம் (கம்பம்மெட்டு காலனி) ஆகிய இரண்டு கட்டிடங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு கூட்டத்தின்போது அறிவுறுத்தியதன்படியும், **12.09.2020**ம் தேதிய கம்பம் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலரின் கடிதத்தில் குறிப்பிட்டவாறு, இரண்டு அங்கன்வாடி மையங்களுக்கு மின் வசதி செய்ய ரூ. **40,000/–** க்க (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) தயார் செய்த மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டபடுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–**<br>**1)** குழந்தைகளின் நலநன கருத்தில் கொண்டு மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** மேற்படி செலவீனத்தை **2020–2021** பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண். **284/2020/**இ**2**) |
| **8.** | இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். **1957**, நாள். **31.01.2020** தேதிய தீர்மானத்தில் அனுமதக்கப்பட்டவாறு, பழைய பயன்படுத்த இயலாத கழிவு மின் பொருட்களை ஏல/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மூலம் அப்புறப்படுத்த **25.09.2020**ம் நாள் ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஒருவரும் ஏலம் கோராத நிலையில், கீழ்கண்ட விபரப்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கம் வைக்கப்படுகிறது. |

| வரிசை எண் | ஓப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | விலை விபரம் (ரூ) |
|---|---|---|
| 1 | திரு. ஆர். தேவ் அஸ்வந்த் | **818.50** |
| 2 | திரு. எல். ராஜேந்திரன், கம்பம் | **892.00** |
| 3 | திரு. எம். புண்ணியஜெயசந்திரன் | **704.50** |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், வ.எண். 2–இல் குறிப்பிட்ட திரு. எல். ராஜேந்திரன், அவர்களின் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 892.00க்கு கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 0320/2019/இ2) |
| **9.** | இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். **1846**, நாள். **30.09.2019** தேதிய தீர்மானத்தில் அனுமதக்கப்பட்டவாறு, குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்தி கழற்றப்பட்ட பழைய பயன்படுத்த இயலாத கழிவு பொருட்களை ஏல/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மூலம் அப்புறப்படுத்த **25.09.2020**ம் நாள் ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஒருவரும் ஏலம் கோராத நிலையில், கீழ்கண்ட விபரப்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கம் வைக்கப்படுகிறது. |

| வரிசை எண் | ஓப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | விலை விபரம் (கிலோ ஒன்றுக்கு ரூபாய்) |
|---|---|---|
| 1 | திரு. ஆர். தேவ் அஸ்வந்த் | **16.00** |
| 2 | திரு. எல். ராஜேந்திரன், கம்பம் | **17.00** |
| 3 | திரு. எம். புண்ணியஜெயசந்திரன் | **16.50** |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், வ.எண். 2–இல் குறிப்பிட்ட திரு. எல். ராஜேந்திரன், அவர்களின் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 17.00–க்கு கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 0320/2019/இ2) |
| **10.** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் Mini Fog Indoor Machine–க்குரிய எரிவாயு உருளைகள் இருப்பு குறைவாக உள்ளது. எனவே மேற்படி Hand Fogging Machine–க்குரிய எரிவாயு உருளைகள் புதியதாக **1200** எண்ணம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. **3.00** இலட்சத்திற்கு மன்றத்தன் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br>**3)** தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| **11.** | கம்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து சேகரமாகும் குப்பைகள் அனைத்தும் இந்நகராட்சிக்கு சொந்தமான கம்பம் – கூடலூார் மெயின்ரோட்டில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கில் குப்பை கழிவுகள் தேங்கி மேடாகி வருகிறது. மேற்படி உரக்கிடங்கில் Processing Unit, Machine மற்றும் அதற்குரிய கூரை (Roof) அமைக்கப்பட்டு உள்ளதால், நகராட்சி வாகனங்கள் குப்பை கழிவுகளை உள்ளே சென்று கொட்டுவதற்கு இடவசதி பற்றாக்குறையாக உள்ளதாலும், ஒரே இடங்களில் மறுபடியும் கொட்டுவதாலும் குப்பை கழிவுகள் தேக்கம் ஏற்படுகிறது. எனவே, மேற்காணும் உரக்கிடங்கில் தேவைப்படும் நேரங்களில் கிட்டாட்சி (HITACHI) மூலம் குப்பை கழிவுகளை ஒதுக்கி சமப்படுத்தம் பணிகளை மேற்கொள்வதற்கு, ஒரு மாதத்திற்கு மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 70,000/– க்கு (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1669/2020/எச்1) |
| | |

**ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி**
**ஆணையாளர்(பொ),**
**கம்பம் நகராட்சி.**

நாள். 30.09. 2020
இடம். கம்பம்